செ.வெ.எண்:47/நவம்பர் நாள்:26.11.2019

## இராமநாதபுரம் மாவட்டம்

## "இந்திய அரசியலமைப்பு நாள்" உறுதிமொழி

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அரசு அலுவலர்கள் எடுத்துக் கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (26.11.2019) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அரசு அலுவலர்கள் "இந்திய அரசியலமைப்பு நாள்" உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

நமது இந்திய தேசம் உலகின் மிகப்பெரிய குடியரசு நாடு ஆகும். ஒவ்வொரு இந்திய குடிமகனுக்குமான அடிப்படை உரிமைகள், குடிமக்களின் கடமைகள், அரசின் உத்தரவு கொள்கைகள் என அனைத்தையும் வரையறுத்து உச்சபட்ச சட்டமாக விளங்குவது இந்திய அரசியலமைப்புச் சட்டமாகும். இச்சட்டமானது நவம்பர் 26, 1949-ஆம் ஆண்டு முதன்முதலில் இயற்றப்பட்டு, ஜனவரி 26-ஆம் நாள் 1950-ஆம் ஆண்டு முழுமையாக செயல்படுத்தப்பட்டது. அதன்படி, ஆண்டுதோறும் ஜனவரி 26-ஆம் நாள் குடியரசு தினமாக நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட நவம்பர் 26-ஆம் நாள் இந்திய அரசியலமைப்பு நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதன்படி இன்றைய தினம் (26.11.2019) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அரசு அலுவலர்கள் "இந்திய அரசியலமைப்பு நாள்" உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ஜி.கோபு, அலுவலக மேலாளர் (குற்றவியல்) திரு.கோவிந்தன் உட்பட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**